**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the Court of XI Additional Special Judge for CBI Cases**

**(CBI Cases Relating to Banks and Financial Institutions)**

**Chennai - 600 001.**

| | | |
|---|---|---|
| Calendar Case | : | C.C. No.27/2015 |
| Deposition of witness for | : | PW 9 |
| Name | : | Mr.S.Bhuvaneswaran |
| Father's / Husband's Name | : | |
| Address for Communication | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion & Caste | : | |
| Age | : | years Mobile: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on this the 4th day of February, 2019.

---

**Chief Examination:**

நான் தற்போது ஓய்வுபெற்ற உதவி ஆணையர் தமிழ்நாடு வணிகவரித்துறை. வணிகவரித்துறையில் வணிகம் செய்பவர்கள் பதிவு செய்ய வேண்டும். அந்த பதிவு செய்வதற்காக அந்த வணிகம் செய்பவர்களின் இடத்தைப் பற்றிய விவரங்கள், அவர் குடியிருப்பு பற்றிய விவரங்கள், தொழில் பற்றிய விவரங்கள், அதற்கான ஆதாரங்களை தாக்கல் செய்ய வேண்டும். மேற்படி ஆவணங்களை நான் ஆய்வு செய்து அதற்கு உரிய பதிவு எண் வழங்குவோம். அந்த பதிவு எங்கள் அலுவலகத்தில் ஏ ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்படும். அதற்கு அந்த பதிவு எண்.TIN (Tamilnadu Identification Number) கொடுப்போம், அது பற்றிய விவரங்களை அந்த வணிகருக்கு பதிவு தபால் மூலம் அனுப்பி வைப்போம். ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்படும் டின் நம்பர் 11 இலக்கமாக இருக்கும், அதில் 5,6,7

இலக்கங்களை வைத்து எந்த வட்டத்திற்குரிய எண் என்பதை கண்டுபிடிக்க முடியும். ஒவ்வொரு வட்டத்திற்கும் தனி எண் வழங்கப்பட்டுள்ளது. அந்த டின் நம்பரை வைத்து அந்த வணிகர் அவருடைய வணிகம் சம்பந்தப்பட்ட மாதாந்திர நமூனாக்களை தாக்கல் செய்ய வேண்டும். பொதுவாக மாதமாதமும், ஒவ்வொரு மாதம் 20ம் தேதிக்குள் அந்த நமூனா தாக்கல் செய்ய வேண்டும். ஒரு கோடிக்கு அதிகமாக வணிகம் செய்தால் ஆண்டுக்கு ஒருமுறை நமூனா தாக்கல் செய்ய வேண்டும்.

நான் 2014ம் ஆண்டில் தாம்பரம் I வணிகவரி அலுவலகத்தில் உதவி ஆணையராக பணியில் இருந்தேன். தாம்பரம் வணிகவரி அலுவலகத்திற்கு வட்ட குறியீடு எண் (5,6,7 இலக்க எண்) 088 ஆகும். பிளாட் எண்.3, கவிமணி நகர், 1வது தெரு, கோவிலம்பாக்கம், சென்னை-117, தாம்பரம் I வட்டத்திற்கு வராது. அது வேளச்சேரி வட்டத்திற்கு உட்பட்டது.

தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.19ல் பக்கம் 17ல் காணப்படும் எம்.டி டிரேட் கார்ப்பரேசன், பிளாட் எண்.3, கவிமணி நகர், 1வது தெரு, கோவிலம்பாக்கம், சென்னை-117 என்ற நிறுவனத்திற்கு 10.6.2010ல் உதவி ஆணையர், தாம்பரம் அசெஸ்மெண்ட் சர்க்கிள் எண். டின் நம்பர் 33561391102 என்ற பதிவு சான்று வழங்கப்பட்டதாக உள்ளது. ஆனால் அ.சா.ஆ.19 பக்கம் 17ல் காணப்படும் சான்று எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டது அல்ல. அதில் காணப்படும் அலுவலக முத்திரைகள், அதிகாரி கையெழுத்துகள் மற்றும் டின் நம்பர் எங்கள் அலுவலகம் சம்பந்தப்பட்டது இல்லை. மேற்படி சான்று போலியான சான்றாகும்.

தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.8ல் பக்கம் 5ல் காணப்படும் எம்.டி.பிரிக்ஸ், பிளாட் எண்.3, கவிமணி நகர், 1வது தெரு, கோவிலம்பாக்கம், சென்னை-117 என்ற நிறுவனத்திற்கு 9.2.2010ல் உதவி ஆணையர், தாம்பரம் அசெஸ்மெண்ட் சர்க்கிள் எண். டின் நம்பர் 33561391104 என்ற பதிவு சான்று வழங்கப்பட்டதாக உள்ளது. ஆனால் அ.சா.ஆ.8 பக்கம் 5ல் காணப்படும் சான்று எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டது அல்ல. அதில் காணப்படும் அலுவலக முத்திரைகள், அதிகாரி கையெழுத்துகள் மற்றும் டின் நம்பர் எங்கள் அலுவலகம் சம்பந்தப்பட்டது இல்லை. மேற்படி சான்று போலியான சான்றாகும்.

தற்போது என்னிடம் காட்டப்படும் 28.11.2014 எங்கள் அலுவலக பதிவேடுகளில் மேற்சொன்ன அ.சா.ஆ.19ன் 17ம் பக்கம், அ.சா.ஆ.8ன் பக்கம் 5ஐ எங்கள் அலுவலக பதிவேடுகளோடு ஒப்பிட்டு பார்க்கையில் மேற்படி இரண்டு சான்றுகளுக்கு உள்ள வணிக நிறுவன முகவரி எங்கள் வட்டத்திற்கு உட்பட்டவை அல்ல என்று தெரிய வந்தது. அந்த டின் நம்பரும் எங்கள் அலுவலகத்திற்கு உரியதல்ல. அது சம்பந்தமாக எங்கள் அலுவலகத்திலிருந்து நான் வழங்கிய கடிதம் **அ.சா.ஆ.115 (1 தாள்)** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. (டி248). இது சம்பந்தமாக சிபிஐ அதிகாரிகள் விசாரித்தார்கள்.

**1, 2, 3, 4, 5, 6வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென்று தெரிவிக்கப்பட்டது.**